தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

02.01.2013 A.M

## தென் தமிழகத்தில் நாளை முதல் கனமழைக்கு வாய்ப்பு

வங்கக் கடலில் அந்தமான் அருகே உருவான காற்றழுத்த தாழ்வு நிலையால் தமிழகத்தில் புதன்கிழமை லேசான மழை பெய்யும். வியாழக்கிழமை முதல் தென் மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: அந்தமான் கடல் அருகில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளதால் ஜனவரி 3 அல்லது 4-ஆம் தேதி முதல் தென் தமிழகத்தில் மழையோ அல்லது இடியுடன் கூடிய கன மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் இருந்து வெகு தொலைவில் நிலை கொண்டிருக்கும் இந்த காற்றழுத்த தாழ்வு நிலை நகரும் திசையை பொருத்து வட தமிழகத்திலும் மழை பெய்யலாம்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு இலங்கை கடல் அருகே இருந்த காற்றழுத்த தாழ்வு நிலையின் காரணமாக பெய்து வந்த மழை குறையும். இதன் காரணமாக தமிழகம் முழுவதும் ஆங்காங்கே லேசான மழையே பெய்ய வாய்ப்புள்ளது, என்று சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் முழுவதும் ஆங்காங்கே புதன்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 31 டிகிரி செல்சியஸாக இருக்கும்.

## புயலால் பாதிப்பு: 200 விவசாயிகளுக்கு விலையில்லா சிறுதளை

கடலூர் மாவட்டத்தில் தானே புயலால் பாதிக்கப்பட்ட 200 விவசாயிகளுக்கு ரூ. 3 கோடியே 18 லட்சம் மதிப்பிலான விலையில்லா சிறுதளைகளை கடலூர் மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் திங்கள்கிழமை வழங்கினார்.

÷கடலூர் மாவட்டத்தில் தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்டபடி சிறப்பு மறுவாழ்வு தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ.58 லட்சம் மதிப்பீட்டிலான நெல் 9000 விலையில்லா சிறுதளைகளும், ரூ.11.92 கோடி மதிப்பிலான 1 லட்சத்து 56 ஆயிரத்து 785 உளுந்து சிறுதளைகளும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

÷இதன் தொடர்ச்சியாக தற்போது உளுந்து சாகுபடிக்கான பருவம் தொடங்கியுள்ள நிலையில் விவசாயிகளுக்கு பயறுவகை சாகுபடி செய்ய ஏதுவாக கடலூர் மாவட்டத்தில் நல்லூர், மங்களூர் வட்டாரம் நீங்கலாக அனைத்துப் பகுதிகளிலும், ரூ.3.18 கோடி மதிப்பில், 52 ஆயிரத்து 250 எண்கள் விலையில்லா சிறுதளைகள் வழங்கத் திட்டமிடப்பட்டு, அதன்படி சிறுதளையில் சான்றுப் பெற்ற உளுந்து விதை 8 கிலோவும், உயிர் உரங்கள் 2 எண்களையும் மாவட்ட ஆட்சியர் கிர்லோஷ்குÔர் திங்கள்கிழமை விவசாயிகளுக்கு வழங்கினார். இவற்றின் மதிப்பு ரூ.760 ஆகும்.

÷மொத்தம் 200 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன், துணை இயக்குநர் இளங்கோவன் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஆர்.அசோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கரும்பு டன்னுக்கு 3 ஆயிரம் வழங்கக் கோரிக்கை

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3000 வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் முதல்வருக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்

டுள்ளது.

÷இதுகுறித்து கம்மாபுரம் ஒன்றிய செயலர் வி.தியாகராஜன் தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறப்பட்டிருப்பது: கடலூர் மாவட்டம், கம்மாபுரம் ஒன்றியத்திலுள்ள விவசாயிகளைப் பாதுகாக்க கூடுதல் மின்சாரம் வழங்க வேண்டும்.

விவசாய செலவினங்கள் கூடுதலான நிலையில், விவசாயிகளின் விளைபொருள்களான கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 3,000, நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரம் வழங்க வேண்டும். கம்மாபுரம் ஒன்றியத்திலுள்ள ஏரி, குளங்கள் மற்றும் நீர்வழி வாய்க்கால்களை தூர்வாரி பாசன வசதியை மேம்படுத்த வேண்டும் என்பன உள்பட பல்வேறு மக்கள் பிரச்னைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை மனுவில் கூறப்பட்டுள்ளது.

## தீவனம் இல்லாததால் சந்தையில் அடிமாட்டு விலைக்கு விற்கப்படும் கறவை மாடுகள்: விவசாயிகள் வேதனை

ஒட்டன்சத்திரம் மாட்டுச் சந்தையில் கறவைமாடுகள் அடிமாட்டு விலைக்கு வாங்கப்படுவதால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம்-தாராபுரம் ரோட்டில் நகராட்சிக்குச் சொந்தமான மாட்டுச் சந்தை உள்ளது. இந்த மாட்டுச்சந்தையானது ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமை நடைபெறுவது வழக்கம். இச்சந்தைக்கு ஒட்டன்சத்திரத்தை சுற்றியுள்ள பல கிராமங்களில் இருந்தும் கரூர், திருச்சி, திருப்பூர், தேனி உள்பட பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

தற்போது போதிய மழை இல்லாததாலும், தீவனங்களின் விலை உயர்வு காரணமாகவும் ஏராளமான விவசாயிகள் மாடுகளை வளர்க்க முடியாமல் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இவற்றை கேரள வியாபாரிகள் இறைச்சிக்காக அடிமாட்டு விலைக்கு வாங்குகின்றனர்.

ஏற்கனவே போதிய மழை இன்றி வறட்சியில் தவிக்கும் விவசாயிகள் தாங்கள் வளர்த்த கால்நடைகளை விற்பனைக்கு கொண்டு வந்தால் போதிய விலை கிடைப்பது இல்லை. இதனால் விவசாயிகள் துயரத்திலும், வேதனையிலும் உள்ளனர்.

மேலும் கேரள வியாபாரிகள் ஒரு லாரியில் சுமார் 35-க்கும் மேற்பட்ட மாடுகளை ஏற்றி அடைத்துக் கொண்டு செல்கின்றனர். இதனால் அந்த மாடுகள் உரிய இடத்திற்குப் போவதற்குள் லாரியிலேயே இறந்து விடுகின்றன.

கடந்த 2 வாரத்திற்குள் கறவை மாடுகள், இளங்கன்றுகள், உயர் இனக் காளைகள் என சுமார் 3,000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து தங்கச்சியம்மாபட்டியைச் சேர்ந்த விவசாயி நாச்சிமுத்து கூறியதாவது: வறட்சி காரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டு விட்டது. விவசாய நிலங்கள் அனைத்தும் தண்ணீர் இன்றி காய்ந்துவிட்டன. மாடுகளுக்குப் போதிய தீவனங்கள் இல்லை.

இதனால் மாடுகளை வளர்க்க முடியாத காரணத்தால் மாட்டுச் சந்தையில் விற்பனைக்கு கொண்டு வந்துள்ளோம் என்றார்.

இது குறித்து மாட்டு வியாபாரி கண்ணையன் கூறியதாவது: இந்த சந்தைக்கு கடந்த மாதம் வரை வாரந்தோறும் சுமார் 600-க்கும் மேற்பட்ட மாடுகள் தான் விற்பனைக்கு வந்தன.

ஆனால் கடந்த 2 வாரமாக வாரந்தோறும் சுமார் 1500-க்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்கு வருகின்றன.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு உயர் இனக் கறவை மாடு ஒன்று ரூ. 35 ஆயிரம் முதல் 45 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது.

கடந்த 2 வாரமாக இதே வகை மாடுகள் ரூ. 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரை தான் விலை போகின்றன. இதற்கு காரணம் மாடுகளின் வரத்து அதிகமானது தான் என்றார்.

## வாழைத் தோட்டங்களில் உரமாகும் தேங்காய் நார்க் கழிவுகள்

கோபி அருகே தேங்காய் நார்க் கழிவுகளை வயலுக்கு விவசாயிகள் உரமாகப் பயன்படுத்துகின்றனர்.

÷கோபி அருகிலுள்ள பவளமலை அருகில் விவசாயி ஒருவர் தேங்காய் நார் மூலம் கயிறு தயாரிக்கும் கம்பெனியை நடத்தி வருகிறார். தேங்காய் நார்க் கயிறு தயாரித்த பின்னர் அதில் எஞ்சும் தேங்காய் நார்க் கழிவுகள் குவித்து வைக்கப்பட்டு, ஆண்டுக்கு ஒருமுறை அவரது கள்ளிப்பட்டியில் உள்ள வயல்களில் பயன்படுத்தப்படுகிறது.

÷தற்போது தமிழ்நாட்டில் நிலவும் கடுமையான வறட்சி, மழையின்மை காரணமாகவும் பவானிசாகர் அணையில் தண்ணீர் இருப்பு இல்லாத காரணத்தாலும், தடப்பள்ளி-அரக்கன்கோட்டை வாய்க்காலில் 2-ஆம் போகத்திற்கு பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.

÷இதனால் தடப்பள்ளி- அரக்கன்கோட்டை வாய்க்கால்ப் பாசனத்தை நம்பியுள்ள 25 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் 95 சதவீதம் நிலங்கள் தரிசாகப் போடப்பட்டுள்ளன. கிணற்றுப் பாசன வசதியுள்ள விவசாயிகள் மட்டுமே 2-ஆம் போகத்தில் நெல், கரும்பு, வாழை, மஞ்சள் ஆகியவற்றை சாகுபடி செய்கின்றனர்.

÷தற்போது பா.நஞ்சகவுண்டம்பாளையம் பகுதியில் விவசாயி ஒருவர் தனது வயலில் வாழை பயிரிட உள்ளார். அதற்காக வயல்களில் உள்ள களிமண் கட்டிகளை உடைக்க "ரோட்டாவேட்டர்' மூலமாக உழவு செய்ய உள்ளார். இதற்காக, தேங்காய் நார்க் கழிவுகளை வயலில் ஆங்காங்கே குவித்து வைத்துள்ளார்.

÷"ரோட்டாவேட்டர்' மூலமாக உழும்போது நார்க்கழிவும் சேர்த்து உழவு செய்யப்படும். அதன் பின்னர் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சும்போது மண் நீண்ட நாட்கள் ஈரப்பதத்துடன் இருக்கிறது.

இதனால் வாழைக் கன்றுகளின் வேர்கள் ஆழமாகச் சென்று, செழிப்பான வாழை பழங்களைத் தருவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

÷வறட்சிக் காலத்தில் விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த சொட்டுநீர்ப் பாசன முறைகளைப் பின்பற்றிவரும் நேரத்தில், வயல்களில் பயிருக்கு பாய்ச்சப்படும் தண்ணீர் நீண்ட நாட்கள் ஆவியாகாமல் இருக்க, இயற்கை முறையில் தேங்காய் நார்க் கழிவுகளைப் பயன்படுத்துவது விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

### யானைகள் கூட்டம் புகுந்து பயிர்கள் நாசம்

வேலூரை அடுத்த ஒடுக்கத்தூர், மேல்அரசம்பட்டு கிராமத்தில் 10-க்கும் மேற்பட்ட காட்டு யானைகள் திங்கள்கிழமை இரவு புகுந்து அப்பகுதி விவசாய பயிர்களை சேதப்படுத்தி சென்றன.

இதில், வாழைத் தோட்டங்கள், கரும்பு தோட்டங்கள் நாசம் அடைந்தன.

தகவலின்பேரில் வனத்துறையினர் அங்கு சென்று, காட்டு யானைகள் முகாமிட்டிருந்த வயல் பகுதிக்கு சென்று பட்டாசு வெடித்து விரட்டினர்.

### விவசாயிகளுக்கு வேளாண்மை சுற்றுலா

செய்யாறு, வெம்பாக்கம் வட்டாரங்களைச் சேர்ந்த விவசாயிகள் வேளாண்மை சுற்றுலாவாக திண்டிவனம், புதுச்சேரி பகுதிகளுக்கு அண்மையில் சென்றுவந்தனர்.

விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவும், பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் விதமாகவும் இச்சுற்றுலாவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதில் வெம்பாக்கம் வட்டாரத்தைச் சேர்ந்த 100 விவசாயிகள் பங்கேற்றனர்.

திண்டிவனம் எண்ணெய்வித்து ஆராய்ச்சி நிலையத்தில் நிலக்கடலை, எள், ஆமணக்கு சாகுபடியில் புதிய உத்திகள், மண்புழு உரம் தயாரித்தல் குறித்து அறிந்தனர்.

பின்னர், புதுச்சேரி காமராசர் வேளாண் அறிவியல் மையத்தில் தோட்டக்கலை பயிர்கள், வாசனைப் பயிர்கள், மூலிகைப் பயிர்கள் சாகுபடி முறைகள் குறித்து தெரிந்துகொண்டனர்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர்கள் எஸ்.சிந்துஜா, தமிழ்ச்செல்வி, தொழில்நுட்ப வல்லுநர்கள் நடராஜன், தனஞ்செழியன், மணிகண்டன் ஆகியோர் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தனர்.

உதவி இயக்குநர்கள் வெம்பாக்கம் கோ.பாண்டியன், செய்யாறு ஏ.எம்.சாந்தி மற்றும் அலுவலர்கள் சுற்றுலாவுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## கால்நடைகளுக்கான சிகிச்சை முகாம்

தருமபுரி மாவட்டம், கெட்டுப்பட்டி கிராமத்தில் திங்கள்கிழமை கால்நடைகளுக்கான சிறப்பு ஆய்வு மற்றும் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

டொக்கு போதனஹள்ளி ஊராட்சிமன்றத் தலைவர் கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் ஆடுகளுக்கு பரிசோதனையும், குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசி பணிகளும் நடைபெற்றன.

நோய்கள் கண்டறியப்பட்ட ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

முகாம் ஏற்பாடுகளை தொப்பூர் கால்நடை மருந்தகத்தின் கால்நடை உதவி மருத்துவர் இ.ரவி செய்திருந்தார்.

01 jan 2012 P.M

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.40, சென்னையில் ரூ.3.45.

கறிக்கோழி

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.75, முட்டைக்கோழி கிலோ ரூ.38.

## தென்னை மரங்களுக்கு காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் தென்னை மரங்களுக்கு இழப்பீடு பெற்றிட புதிய திட்டமாக தென்னை மரக்காப்பீட்டுத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்ட விவசாயிகள் தென்னை மரங்களை காப்பீடு செய்திட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மாவட்ட வேளாண்மை இணைஇயக்குநர் ஆ.பிரபாகரன் விடுத்துள்ள செய்தி:

இந்திய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்ட நிறுவனம் சார்பில் செயல்படுத்தப்படும் இந்த தென்னை மரக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இயற்கை சீற்றங்களால் தென்னை மரங்களுக்கு முழுமையான பாதிப்புகளுக்கு இழப்பீடு பெற முடியும். திருட்டு, தகராறு உள்ளிட்டவற்றால் தன்னிச்சையாக பராமரிக்கப்படாமல் விடப்படும் தென்னை மரங்கள், மனிதன் மற்றும் மிருகங்களால் ஏற்படும் அழிவு, நோய்வாய்ப்பட்ட கன்றுகள் ஆகியவற்றுக்கு இழப்பீட்டுத்தொகை பெற முடியாது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விவசாயிகள் தனிப்பயிராகவோ, ஊடுபயிராகவோ, வரப்பில் வரிசையாகவே, வீட்டுத் தோட்டத்திலோ குறைந்தபட்சம் பலன்தரக்கூடிய 10 மரங்களாவது சாகுபடி செய்திருக்கவும், வளமான ஆண்டுக்கு 30 காய்களுக்கு மேல் பலன் தரக்கூடிய மரங்களாவும் இருக்க வேண்டும். குட்டை மற்றும் ஒட்டுரகங்களுக்கு 4-ஆம் ஆண்டு முதலும், நெட்டை ரகங்களுக்கு 7-ஆம் ஆண்டு முதல் 60-ஆம் ஆண்டுவரை காப்பீட்டு செய்யலாம். ஒரு ஹெக்டருக்கு 175 மரங்கள் மட்டுமே காப்பீடு செய்யத் தகுதியாகும்.

4 முதல் 15 வயது உள்ள மரங்களுக்கு காப்பீட்டுத்தொகை மரம் ஒன்றுக்கு ரூ.600 கிடைத்திட பிரீமியம் தொகையாக ரூ.1.06 செலுத்திட வேண்டும். இதேபோல், 16 வயது முதல் 60 வயதுடைய மரங்களுக்கு ரூ.1150 காப்பீட்டுத் தொகை பெற ஒரு மரத்துக்கு ரூ.1.44 பிரீமியம் தொகை செலுத்திட வேண்டும்.

தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டோர் இந்திய வேளாண்மை காப்பீட்டு நிறுவனம், தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகள் மதிப்பீடு ஆய்வு செய்து சான்றளித்த பிறகு இழப்பீடு தொகை வழங்கப்படும். காப்பீடு செய்யப்பட்ட தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டால் மரத்தை வேளாண்மை அலுவலர்கள் முன்னிலையில் வெட்டி நீக்க வேண்டும். அவ்வாறு வெட்டாமல் விட்டுவிட்டால் நஷ்டஈட்டில் 50 சதவீதம் மட்டுமே பெற முடியும்.

தற்போது ஆரோக்கியமாக, நல்ல நிலையில் உள்ள தென்னை மரங்களுக்கு மட்டுமே காப்பீடு செய்ய இயலும். எனவே, இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு காப்பீடு செய்து பயன்பெற வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 48.82 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரபடி 48.82 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 204 கன அடி நீர்

வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.94 டி.எம்.சி.

## ரூ.28 லட்சம் மதிப்பில் தரப் பரிசோதனை

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வேளாண் வணிகத் துறை சார்பில் ரூ.28 லட்சம் மதிப்பில் தரப் பரிசோதனை (அக்மார்க்) ஆய்வுக் கூடம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தேன், நெய், மஞ்சள் பொடி உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் தயாரிப்புக்காக அக்மார்க் தரச் சான்று பெறப்படுவது வழக்கம். இதற்காக திருப்பூர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை சார்பில் தரச் சான்று (அக்மார்க்) ஆய்வுக் கூடம் அமைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே இருந்த கட்டடம் பழுதடைந்த காரணத்தால், புதிய கட்டடம் கட்டப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கால்நடை விழிப்புணர்வு நிகழ்ச்சி

காரைக்குடி அருகே திருமயம் செயின்ட் ஜோசப் பாலிடெக்னிக் கல்லூரியில் என்எஸ்எஸ் சார்பில் கால்நடை விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

செயின்ட் ஜோசப் கல்வி நிறுவனங்களின் தலைவர் ஞா.அடைக்கலசாமி தலைமை வகித்தார். துணைத் தலைவர் ஞா.அந்தோணிசாமி, கல்லூரி முதல்வர் பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்வி நிறுவன இணைச்செயலர் சே.கிருபாகரன், செயலர் அ.ஞானஅருள்ராஜ் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

நிகழ்ச்சியில், திருமயம் கால்நடை மருத்துவர் கே.ராஜேஸ்வரி கால்நடைகளை பராமரிக்கும் வழிமுறைகள், கால்நடைகளுக்காக அரசு வழங்கும் திட்டங்கள் குறித்து விளக்கினார். இதில் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் கே.ரஞ்சித்குமார் வரவேற்றார். என்.எஸ்.எஸ். மாணவர் ப.கணேசன் நன்றி கூறினார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

02.01.2013 A.M

## கால்நடைகளுக்கு சிகிச்சை முகாம் கிராமங்களில் நாளை நடத்த முடிவு

திண்டுக்கல் : அரசினால் வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகள், பசுக்களுக்கான சிறப்பு சிகிச்சை முகாம் நாளை(டிச. 31) அனைத்து கிராமங்களிலும் நடத்தப்பட உள்ளது.

கடந்த ஆண்டு தமிழகத்தில் 12,000 ஏழை பெண்களுக்கு 12,000 பசுக்களும், ஒரு லட்சம் பயனாளிகளுக்கு மொத்தம் 4 லட்சம் ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் கடந்த ஆண்டு 150 பசுக்கள், 16080 ஆடுகளை பயனாளிகள் பெற்று பயனடைந்தனர். இந்த ஆண்டு இதுவரை 50 பசுக்கள், 17420 ஆடுகள் ஏழைகளுக்கு தரப்பட்டுள்ளது.

இவைகளுக்கான சிறப்பு இலவச முகாம் அனைத்து கிராமங்களிலும் நாளை முதல் நடைபெற உள்ளது.

விலையில்லாஆடுகள், பசுக்களை பெற்றவர்கள் தங்கள் கால்நடைகளை முகாமிற்கு அழைத்து சென்று பரிசோதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## வறட்சியை சமாளிக்க விவசாயிகளுக்கு யோசனை

குஜிலியம்பாறை : குஜிலியம்பாறை வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல், நிலக்கடலை, கரும்பு ஆகியன போதுமான மழை இல்லாத காரணத்திலும், நீர் ஆதாரம் குறைந்து வருவதாலும் பயிர்கள் சற்று வாடும் நிலையில் உள்ளது.

இந்த சூழ்நிலையில், பயிர்களை பாதுகாக்க வேளாண்மை உதவி இயக்குநர் ரவிபாரதி யோசனை தெரிவித்துள்ளார்.பொட்டாசியம் குளோரைடு 2 சதவீத கரைசல் தெளிப்பதின் மூலம் பயிர்கள் இழைவழியாக நீர் ஆவியாதல் குறைக்கப்படுகிறது. இதன் காரணமாக மகசூல் தரக்கூடி பூ , பிஞ்சுகள் உதிராமல் பயன்தரக்கூடிய அளவில் மகசூல் கிடைக்கும்.பயிறு வகை பயிர்களான துவரை, உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயிறு ஆகிவற்றில் பூக்கும் தருணம், 2 சதவீத டி.ஏ.பி., இழை வழி கரைசல் தெளிக்க சிபாரிசு செய்யப்படுகிறது. இதனால் ஏக்கருக்கு 100 கிலோ முதல் 150 கிலோ வரை கூடுதல் மகசூல் கிடைக்க செய்யும்.

மிக இக்கட்டடான சூழ்நிலையில், பாசன நீரை சிக்கனமாகவும் விரையமின்றியம் பயிர்களுக்கு கிடைத்திட ஏதுவாக தெளிப்பு நீர் கருவிகள்
மற்றும் மழை தூவுவான் ஆகியவை 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளன.
மேலும் விபரங்களுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அனுகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராட்சை விவசாயிகள் கவலை மொச்சை விவசாயிகள் மகிழ்ச்சி

கூடலூர் : தேனி மாவட்டத்தில், அதிகளவு பனிப்பொழிவால், திராட்சையில் செவட்டை நோய் தாக்கி பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் திராட்சை விவசாயிகள் கவலையடைந்துள்ள நிலையில், இதுவே மொச்சை மகசூலை அதிகரித்துள்ளதால், மொச்சை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
கம்பம் பள்ளத்தாக்கில் கூடலூர், குள்ளப்பகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் திராட்சை விவசாயம் அதிகம் உள்ளது. கடந்த சில தினங்களாக, கடும் பனிப்பொழிவால், திராட்சையில் செவட்டை நோய் தாக்கியுள்ளது.பலன் தரும் நேரத்தில், பூக்கள் உதிர்ந்து வரத்து குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
செவட்டை நோயில் இருந்து, பயிர்களை காப்பாற்ற,தினசரி மூன்று முறை மருந்து தெளித்து வருகின்றனர். இதனால் திராட்சை விவசாயிகள் கவலையில் உள்ளனர்.
மகிழ்ச்சியில் மொச்சை விவசாயிகள்: பனிப்பொழிவால், மொச்சை பயிரில் பூக்கள் கூடுதலாக பூத்து,காய்ப்பு அதிகரித்துள்ளது. கூடலூரில் மொச்சை சீசன் துவங்கும் போது, வரத்து மிகக் குறைவாக இருந்தது.தற்போது வரத்து அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## வாழை சாகுபடி பரப்பு 10 ஆயிரம் ஏக்கராக உயர்வு: கரும்பு விவசாயிகளின் பயிர் மாற்றத்தின் விளைவு

தேனி : கரும்பு விவசாயிகள் வாழை சாகுபடிக்கு மாறி வருவதால், வாழை சாகுபடி பரப்பு மாவட்டத்தில் பத்தாயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது.
தேனி மாவட்டத்தில் கரும்பு சாகுபடி பரப்பு 20 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் உயர்ந்தது. பருத்தி சாகுபடி செய்த விவசாயிகள் அனைவரும் கரும்புக்கு மாறினர். காலப்போக்கில் விவசாயிகளுக்கு கரும்பும் கசந்து விட்டது. தற்போது கரும்பு ஒரு டன்னுக்கு வெட்டுக்கூலி 700 ரூபாயாக உயர்ந்துள்ளது. உற்பத்தி செலவு 700 ரூபாய் ஆகிறது. லாரிவாடகை, இதர செலவு 100 ரூபாய் ஆக ஒரு டன் கரும்புக்கு 1500 ரூபாய் முதல் 1600 ரூபாய் செலவாகி விடுகிறது. கரும்புக்கு அரசு

டன்னுக்கு 2350 ரூபாய் விலை நிர்ணயம் செய்துள்ளது. மாநில அரசு தனது மானியத்தை கடந்த 2012ம் ஆண்டு முழுக்க வழங்கவில்லை. எனவே விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்புக்கு சராசரியாக 600 ரூபாய் முதல் 700 ரூபாய் வரை மட்டுமே வருவாய் கிடைத்தது. ஒரு ஏக்கருக்கு 50 முதல் 60 டன் வரை விளைச்சல் கிடைக்கிறது. இந்த கணக்குப்படி ஒரு ஆண்டு ஒரு ஏக்கரில் சாகுபடி செய்த கரும்புக்கு 30 ஆயிரம் ரூபாய் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே லாபம் கிடைக்கிறது. இந்த பணமும் கைக்கு வந்து சேர பல மாதங்கள் ஆகும்.வழைத்தார் 375 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. தாரினை தோட்டத்திற்கே வந்து வெட்டி எடுத்து சென்று விடுகின்றனர். ஒரு ஏக்கருக்கு 1,200 கன்றுகள் வளர்த்தாலும், ஆயிரம் கன்றுகள் கைக்கு வந்து சேரும். ஆக வருமானம் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயாக உயர்ந்து விடுகிறது. இதில் செலவு போக விவசாயிகளுக்கு குறைந்த பட்சம் 2.50 லட்சம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கிறது. இந்த பணமும் உடனே கைக்கு வந்து சேர்ந்து விடுகிறது. இந்த காரணங்களால் கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் பலரும் வாழைக்கு மாறி வருகின்றனர். இதனால் 3,500 ஏக்கர் முதல் 4 ஆயிரம் ஏக்கராக இருந்த வாழை சாகுபடி பரப்பு தற்போது 10 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது. 20 ஆயிரம் ஏக்கராக இருந்த கரும்பு சாகுபடி பரப்பு 14 ஆயிரம் ஏக்கருக்கும் கீழ் குறைந்து விட்டது. கரும்புக்கான கொள்முதல் விலையினை மத்திய, மாநில அரசுகள் உயர்த்தி வழங்காவிட்டால், மேலும் பல நூறு விவசாயிகள் கரும்பு சாகுபடியினை கைவிட்டு விடும் வாய்ப்புகள் உள்ளது.

## தேவதானப்பட்டி செங்கரும்பு பொங்கலுக்கு தயார்

தேவதானப்பட்டி : தேவதானப்பட்டி மஞ்சளாறு அணை பகுதியில் விளைந்துள்ள செங்கரும்புகள்தை பொங்கலுக்காக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. தைப் பொங்கல் என்றாலே அனைவருக்கும் நினைவுக்கு வருவது ஜல்லிக்கட்டு, பொங்கல் வைத்தல், தித்திக்கும் செங் கரும்புகள் தான் நினைவுக்கு வரும். அதுவும் மஞ்சளாறு அணைப் பகுதியில் விளையும் கரும்புகளுக்கு என்று தனி சுவை உண்டு. நன்கு வளர்ந்து, கருமை நிறத்துடன் 10 மேற்பட்ட கனுக்களுடன் பார்ப்பதற்கு அழகாகவும் சுவைப்பதற்கு தித்திப்பாகவும் இருக்கும்.தேவதானப்பட்டி, நாகர்வள்ளி உள்ளிட்ட மஞ்சளாறு அணை நீர் பாசனப்பகுதியில் 100 ஏக்கருக்கு மேல் செங்கரும்பு நடவு செய்யப்பட்டுள்ளது. தற்போது தைப் பொங்கலுக்கு விற்பனைக்கு தாயாராக உள்ளது.திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சி, சென்னை உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரிகள் செங்கரும்பை கொள்முதல் செய்ய துவங்கியுள்ளனர். இங்கிருந்து ஆந்திராவிற்கும் கரும்பு அனுப்பப்படுகிறது. 10 கரும்பு தட்டைகள்

கொண்டது ஒரு கட்டாக விற்பனை செய்யப்படுகிறது. இதன் விலை 150 ரூபாயில் இருந்து 180 ரூபாய் வரை கரும்பின் உயரத்தைப் பொறுத்து விற்பனை செய்யப்படுகிறது.

விவசாயி ஆர்.கந்தனர் கூறுகையில்,""மஞ்சளாறு அணை நீர் பாசனத்தில் விளையும் செங்கருப்பு என்பதால், மற்ற பகுதியில் விளையும் கரும்புகளை விட, இதன் சுவை மிக, மிக இனிøயாக இருக்கும். வெளி மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் வரத்துவங்கி உள்ளனர்," என்றார்.

## மீன் வளர்ப்பு பண்ணைகளுக்கு 50 சதவீத மானிய பொருட்கள்

விருதுநகர் : விருதுநகர் மாவட்டத்தில் மீன் குஞ்சு பண்ணைகளுக்கு, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ,50 சதவீத மானியத்தில் மீன் குஞ்சுகள், தீவனங்கள் வழங்கப்பட உள்ளது. மாவட்டத்தில் உள்ள தனியார் மீன் குஞ்சு பண்ணைகளுக்கு, நுண் மீன் குஞ்சுகள் மற்றும் மீன் தீவனங்கள் வாங்க, 50 சதவீத மானியம் அரசு வழங்க உள்ளது. இத்திட்டத்தின் கீழ், தனியார் மீன் குஞ்சு பண்ணையாளர்கள் மீன்களை அதிகரித்து, மீன் வளர்ப்பினை ஊக்குவிப்பதுடன், மீன் குஞ்சு தேவையை நிறைவு செய்ய முடியும்.

மானியம் பெற பண்ணையாளர்கள், 2 எக்டேர் பரப்பளவில், மீன் குஞ்சு பண்ணைகள் இருக்க வேண்டும்.

2012 ம் ஆண்டுக்கு முன்னர் அமைக்க பட்டிருக்க வேண்டும். மாவட்ட நன்னீரில் மீன் வளர்ப்போர் முகமை உறுப்பினராக இருக்க வேண்டும்.

நல் நீர் வளம், நீராதாரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். இத்திட்டத்தில் மீன் குஞ்சு பண்ணையாளர்கள் எக்டேருக்கு ஒரு லட்சம் மதிப்பில், உள்ளீட்டு பொருட்கள் மானியத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மீன் குஞ்சு உற்பத்தி அதிகரித்து, மீன் உற்பத்தி வெகுவாக உயர்ந்து,விவசாயிகள் வாழ்வாதாரம் உயர வழி வகுக்கும். மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணையாளர்கள், மீன் வள உதவி இயக்குனர் அலுவலகம், (உள்நாட்டு மீன் வளம்) விருதுநகர், 130 ராஜாமணி ஹால், அருப்புக்கோட்டை ரோடு, விருதுநகர், போன் 04562 244 707 தொடர்பு கொள்ளலாம் என, கலெக்டர் ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

## பயிர் "இன்சூரன்ஸ்' பதிவு தேதியை நீட்டிக்க எதிர்பார்ப்பு: நிவாரணம் பெற முடியாது தவிக்கும் விவசாயிகள்

நரிக்குடி : பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், "இன்சூரன்ஸ்' பதிவு செய்யும் தேதியை, கால நீட்டிப்பு செய்ய வேண்டும் என, விவசாயிகள்

எதிர்பார்க்கின்றனர்.

நரிக்குடி பகுதியில் மழை இல்லாமல், நெல் பயிர்கள் அனைத்தும் வீணாகி விட்டன. விவசாயிகள் அந்தந்த பகுதி கூட்டுறவு சங்கத்தில், தங்களின் நிலங்களை இன்சூரன்சிற்காக பதிவு செய்தனர். பதிவு செய்யும் தேதியானது, டிச., 15 ல் முடிந்து விட்டது. முறையான அறிவிப்பு இல்லாததால், பெரும்பாலான விவசாயிகள், தங்களது நிலங்களை பதிவு செய்யவில்லை.

கூட்டுறவு செயலாளர்கள், டிச.,

15 க்கு மேல் பதிவு செய்ய சென்ற விவசாயிகளிடம், பதிவு செய்ய முடியாது எனக் கூறி விட்டனர். முறையான அறிவிப்பு இல்லாததால் ,பெரும்பான்மையான விவசாயிகள் பதிவு செய்யவில்லை. விவசாயம் பொய்த்துப் போன நிலையில், அரசு தரும் நிவாரணம் ஓரளவிற்கு கஷ்டத்தினைப் போக்கும். ஆனால், பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே நிவாரணம் கிடைக்கும் என, பதிவு செய்யாத விவசாயிகள் புலம்புகின்றனர்.

பாஸ்கரன்,"" உளுத்திமடையிலுள்ள கூட்டுறவு சங்கத்தில் நாலூர், உளுத்திமடை, கட்டனூர், பள்ளப்பச்சேரி உள்ளிட்ட கிராம விவசாயிகள், பயிர் பாதுகாப்புத்

திட்டத்தின் கீழ், தங்களது நிலங்களை பதிவு செய்ய வேண்டும்.

டிச. ,15 தான் இறுதி நாள் என

விவசாயிகளுக்கு தெரியாது.

தகவல் தெரிந்த ஒரு சிலர் மட்டுமே பதிவு செய்தனர். தாமதமாக தகவல் தெரிந்த பின்னர், வி.ஏ.ஓ., விடம் அடங்கல் மற்றும் பட்டா ஆகியவற்றை தயார் செய்வதற்கு, இரு நாட்களுக்கு மேல் ஆகி விட்டது. அனைத்து விவசாயிகளும் பயனடையும் வகையில், பயிர்

பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்ய, கால நீட்டிப்பு செய்ய

வேண்டும்,"என்றார்

## நெற்பயிரில் இலைச் சுருட்டுப் புழுவை தடுக்கும் முறைகள் * வேளாண் அலுவலர் "அட்வைஸ்'

தென்காசி:வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் விவசாயிகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது நெல்லை மாவட்டம் கடையம் வட்டாரத்தில் பரவலாக நடவு செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழுக்களின் தாக்குதல் அதிகமாக காணப்படும். பெத்தான்பிள்ளைகுடியிருப்பு, சம்பன்குளம், ஆம்பூர் பகுதிகளில் சாகுபடி செய்துள்ள சாவித்திரி நெல் பயிரில் இலைசுருட்டுப்புழு தாக்குதல் அதிகம் காணப்படுகிறது.

இப்பூச்சிகள் பெரும்பாலும் இரவு நேரங்களில் காணப்படுகிறது. மழை குறைவாகவும்,

மேகமூட்டமாக இருக்கும் சூழலில் இவற்றின் தாக்குதல் அதிகமாக இருக்கும். தாய் அந்துப் பூச்சிகள் வெளிரிய பழுப்பு நிறத்தில் பளபளக்கும் மஞ்சள் கலந்த பழுப்பு நிற இறக்கையுடன் காணப்படும்.

வயல்கள் மற்றும் வரப்புகளில் உள்ள புற்களை நீக்கி வயலைச் சுத்தமாக வைத்திட வேண்டும். அதிகமாக தழைச்சத்து அதாவது யூரியா போட்ட வயல்கள், குருனை மருந்தான போரேட், கார்போபியூரான் போடப்பட்ட வயல்களில் பாதிப்பு அதிகமாக காணப்படும். நிழல் உள்ள இடங்களில் மற்றும் பயிர் நெருக்கமாக அதிக தழைச்சத்து பெற்று வளமாக இருக்கும் இடங்களில் முதலில் தாக்குதல் தென்படும் தழைச்சத்து ஒரு ஏக்கருக்கு 25 கிலோவுடன் 35 கிலோ பொட்டாஷ் உரத்தை இரு தடவையாக பிரித்து இடவேண்டம். மேலும் ஒரு ஏக்கருக்கு டிரைக்கோ கிரம்மா கைலோனிஸ் ஓட்டுண்ணியை 5சிசி என்ற அளவில் வாரம் ஒரு முறை வயலில் உலவ விட்டால் இப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

பூச்சி மருந்தை காலை அல்லது மாலை வேளைகளில் வயலில் நீரை நன்கு வடித்துவிட்டு ஒரே மருந்தை திரும்ப திரும்ப தெளிக்காமல் மருந்துகளை சுழற்சி முறையில் அடித்து பூச்சிகளை தடுக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கடும் பனியால் உதிரும் மாம்பிஞ்சுகள் காய் பிடிக்காததால் விவசாயிகள் விரக்தி

ஈரோடு:ஈரோடு மாவட்டத்தில் கொட்டும் பனியால், மா பிஞ்சுகள் உதிர்ந்து விழுவதாலும், காய் பிடிக்காததாலும் விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.

தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் மாவட்டத்துக்கு அடுத்தபடியாக, அதிக மாங்காய் சாகுபடியில், ஈரோடு மாவட்டம் உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் இருந்து பல்வேறு மாவட்டத்துக்கு, மாங்காய்கள் ஏற்றுமதியாகிறது.

ஆண்டுதோறும் கோடை காலத்தில் மாங்காய் சீசன் துவங்குவது வழக்கம். மேலும், ஜனவரியில் மா மரங்கள் பிஞ்சுகள் வைத்து, பிப்ரவரியில் மாங்காய் சாகுபடி செய்யப்படும். ஆனால், இந்த ஆண்டு கால நிலை மாற்றத்தால், மா மரங்கள் காலதாமதமாக மா பிஞ்சுகள் வைத்துள்ளது. மேலும், ஈரோட்டில் கொட்டும் பனிப்பொழிவால், மா பிஞ்சுகள் உதிர்ந்து, காய் பிடிக்காததால், ஈரோடு மாவட்ட மா விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.

இதுகுறித்து ஈரோடு நல்லிகாட்டுதோட்ட விவசாயி ரங்கசாமி கூறியதாவது:

தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மாவட்டத்துக்கு இணையாக, ஈரோடு மாவட்டத்திலும் மாங்காய் சாகுபடி நடந்து வருகிறது. பொதுவாக மாமரங்கள், ஆண்டு தோறும் ஜனவரியில் பிஞ்சு வைத்து,

ஃபிப்ரவரியில் காய் வைக்கும். ஆனால், இந்த ஆண்டு பருவ நிலை மாற்றத்தால், காய் வைப்பதே தாமதமானது. ஜூலையில், பிஞ்சு வைத்தது. டிசம்பரில் நல்ல மகசூல் கிடைக்கும் என எதிர்பார்த்தோம்.

ஆனால், ஈரோட்டில் நிலவும் கடும் பனிப்பொழிவால், மா பிஞ்சுகள் உதிர்ந்து வருகிறது. மேலும், மா மரங்கள் காய் பிடிக்காமல் போவதால், ஈரோடு மாவட்டத்தில் இந்த ஆண்டு குறைவான மாங்காய்களே சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்து மாவட்டத்திலும் கொட்டும் பனியால், மா விளைச்சல் பாதிக்கப்பட்டதாக, பல்வேறு விவசாயிகள் தெரிவித்தனர். மாநிலம் முழுவதும் ஏற்றுமதியாகும் மாங்காய்களின் வரத்து குறைவதால், வரும் காலத்தில் மாங்காய், மாம்பழங்களின் விலை அதிகரிக்கும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## கோழிப்பண்ணை அபிவிருத்தி திட்டத்தின் கலந்தாய்வு கூட்டம்

பெரம்பலூர்: பெரம்பலூர் கலெக்டர் அலுவலகத்தில், கோழிப்பண்ணை அபிவிருத்தி திட்ட கலந்தாய்வு கூட்டம், பெரம்பலூர் கலெக்டர் தரேஷ் அஹமது தலைமையில் நடந்தது. கூட்டத்தில் அவர் தெரிவித்ததாவது:

தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்காக, பல்வேறு திட்டங்களை அறிவித்ததில், கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் கோழிப்பண்ணை அபிவிருத்தி திட்டம் முக்கியமான திட்டமாகும்.

கோழிப்பண்ணை தொழில் நாமக்கல், பல்லடம், போன்ற பகுதிகளில் மட்டுமே செயல்படுத்த முடியும் என்ற கருத்தை மாற்ற, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் இத்தொழில் பரவலாக்கப்பட வேண்டும் என்று, சங்கரன்கோவில், விழுப்புரம் ஆகிய இரண்டு கோழிப்பண்ணை மண்டலங்களை உருவாக்கி, விழுப்புரம் மண்டலத்தில் விழுப்புரம், கடலூர், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களும், சங்கரன்கோவில் மண்டலத்தில், திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களையும் உள்ளடக்கிய கோழிப்பண்ணை தொழிலை செயல்படுத்திட அரசு ஆணை வெளியிடப்பட்டது.

இதில், விழுப்புரம் மண்டலத்தில் பெரம்பலூர் மாவட்டத்துக்காக, 5,000 கோழிகள் வீதம் பண்ணைகள் அமைக்க, 138 பண்ணைகளுக்கு, 285 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்,

கலெக்டர் சிறப்பு மனுநீதி நாள் முகாம், மற்றும் செய்தித்தாள்களின் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு, 615 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. பிறகு கோழிப்பண்ணை ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டங்கள் கூட்டி, ஒருங்கிணைப்பாளர் தேர்வு செய்யப்பட்டு, அனைத்து விண்ணப்பங்களும் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, தகுதியுள்ள, 315 விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவைகள் சம்மந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பப்பட்டதில், திருப்பி செலுத்தும் திறன் உள்ள பயளானிகளின் பெயர்கள் வங்கியால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவர்களில் வங்கிகள் கேட்கும் அனைத்து விதமான சான்றுகளை கொடுக்கும், 138 நபர்களுக்கு கோழிப்பண்ணை கட்டிடம் கட்ட, 7.50 லட்சம் ரூபாய், உபகரணங்கள் வாங்க, 75 ஆயிரம் ரூபாய் என, மொத்தம், 8.25 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்படுகிறது. இதில் தமிழக அரசு மானியம், 25 சதவீதம், 2.06 லட்சம் ரூபாயும், நபார்டு திட்டத்தின்மூலம், 25 சதவீத மானியம், 2.06 லட்சம் ரூபாயும் வழங்கப்படும்.

இக்கோழிப்பண்ணைகள் அமைத்து, அதற்கு குஞ்சுகள், தீவனங்கள், மருந்துகள், மற்றும் மேற்பார்வை போன்ற பணிகள், கோழிப்பண்ணை ஒருங்கிணைப்பாளர்களால் வழங்கப்பட்டு, வளர்ப்பு தொகை வங்கிகளுக்கு அனுப்பப்படும்.

## தேவனூர் பகுதியில் நெல் அறுவடை தீவிரம்

அவலூர்பேட்டை:தேவனூர் பகுதியில் நெல்அறுவடை பணிகள் மும்முரமாக நடக்கிறது.மேல்மலையனூர் ஒன்றியத்தில் பல இடங்களில் தற்போது நெல் அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளது. விவசாயிகள் தங்களது வயல்களில் இயந்திரம் மூலம் நெல் அறுவடை பணிகளை கடந்த ஒரு வாரமாக மேற்கொண்டுள்

ளனர்.கிராம பகுதிகளில் உள்ள அனைத்து உலர் களங்களிலும் நெல் பயிரை உலர வைப்பதற்காக குவித்துள்ளனர். இடம் போதாமல் ரோடுகளிலும் உலர்த்தி வருகின்றனர்.தற்போது வேர்க்கடலை விதைத்துள்ள நிலங்களில் களை எடுக்கும் பணியும் தீவிரமாக நடப்பதால் ஆட்கள் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.

## செஞ்சி கோட்டையில் பூத்துக் குலுங்கும் மருத்துவ குணமுடைய ஆவாரம் பூக்கள்

செஞ்சி:மருத்துவ குணமுடைய ஆவாரம் பூக்கள் செஞ்சி கோட்டை பகுதியில் பொன் மஞ்சள் நிறத்தில் பூத்து குலுங்குகின்றன.நமது பாரம்பரிய வைத்திய முறையில் நாம் அன்றாடம் பார்க்கும் தாவர வகைகளின் மூலம் பல சிக்கலான நோய்களை எளிதாக குணப்படுத்தி வந்தனர்.ஆங்கிலேயர்களின் வருகைக்கு பிறகு உள்ளே புகுந்த ஆங்கில வைத்திய முறை நமது

பாரம்பரிய வைத்திய முறைகளை பின்னுக்கு தள்ளியது. நம்மை சுற்றி இருக்கும் மருத்துவ குணமுடைய தாவர வகைகளைப் பற்றி தெரிந்து கொள்ளும் வாய்ப்பையும் இல்லாமல் செய்தது.அரிசியை பிரதான உணவாக எடுத்து கொள்ளும் தென்னிந்தியர்களை பெரிதும் அச்சுறுத்தி வரும் நோய்களில் நிரிழிவு நோய் எனப்படும் சர்க்கரை நோய் மிக முக்கியமானது.இந்நோயை கட்டுப்படுத்தி குணமளிக்கும் தன்மை கொண்டவை ஆவாரம்பூக்கள்.தரிசு நிலங்களில் தானாக வளரும் இவை வறட்சியையும் தாங்கி வளரக்கூடியவை. ஆவாரம் பூவையும், கொழுந்தையும் காயவைத்து பொடி செய்து கஷாயம் வைத்து, பாலுடன் சேர்ந்து பருகி வர சர்க்கரை நோய் படிப்படியாக குறையும்.

இதை உணவுடன் சேர்ந்து கூட்டாக சமைத்து சாப்பிடலாம். மூல நோய், உடல் சூடு உள்ளிட்ட நோய்களையும் குணப்படுத்தும் ஆற்றல் கொண்டது.இவ்வகை மருத்துவ குணமுடைய ஆவாரம் பூக்கள் தற்போது, செஞ்சிக்கோட்டை பகுதியில் பொன் மஞ்சள் நிறத்தில் பூத்து குலுங்குகின்றன.பக்க விளைவில்லாத இந்திய மருத்துவ முறையில் நம்பிக்கை உள்ள பலரும் ஆவாரம் பூக்களை தினமும் பறித்து செல்கின்றனர்.சமீப காலமாக சர்க்கரை நோயை குணப்படுத்தும் ஆற்றல் ஆவாரம் பூவுக்கு உண்டு என்பதை இதன் பொடியை வாங்குவதில் நகர பகுதியில் உள்ளவர்களும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
தற்போது இதன் பொடி 100 கிராம் 40 ரூபாய்க்கு நாட்டு மருந்து கடைகளில் விற்பனை செய்கின்றனர்.இன்றளவும் இயற்கையாக கிடைக்கும் இது போன்ற உணவு வகைகளின் தன்மையை அறிந்து சரியான விகிதத்தில் உணவில் சேர்ப்பதன் மூலம் நோயின்றி ஆரோக்கியமாக வாழ வழி பிறக்கும்.

## பருவமழை பொய்த்ததால்பருத்தி விளைச்சல் பாதிப்பு

சின்னசேலம்:பருவமழை பொய்த்துவிட்டதால் சின்னசேலம் பகுதிகளில் மானாவாரியில் பயிரிடப்பட்டிருந்த பருத்தி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.
சின்னசேலம் தாலுகாவில் 85 கிராமங்கள் உள்ளன 1,500க்கும் மேற்பட்ட ஏக்கரில் பருத்தி பயிரிட்டுள்ளனர். 10 மாத பயிரான பருத்தி ஜூன் மாதம் பயிரிடப்பட்டு, பிப்ரவரி மாதம் வரை அறுவடை செய்யப்படும்.இந்த ஆண்டு பருவமழை முற்றிலும் இல்லாததததால் பருத்தி பயிர் பாதிக்கப்பட்டு விளைச்சல் முற்றிலுமாக குறைந்துவிட்டது. வழக்கமாக ஒரு ஏக்கருக்கு 12 குவிண்டால் பருத்தி கிடைக்கும் நிலை மாறி தற்போது 5 குவிண்டால் கிடைத்தாலே பெரிய விஷயம் என்ற நிலைக்கு விளைச்சல் குறைந்துள்ளதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**உளுந்து சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்**

விழுப்புரம்:பருவ மழை பொய்த்துவிட்டபோதும் உளுந்து சாகுபடியில் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை என்பதால் விழுப்புரம் மாவட்டத்தின் பல பகுதிகளில் உளுந்து சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.தமிழகத்தின் மொத்த விவசாய விளைபொருட்கள் உற்பத்தியில் 15 சதவீதம் விழுப்புரம் மாவட்டத்தில் விளைகிறது. இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் பெரும்பாலான இடங்களில் நெல் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அணைக்கட்டுகள், ஏரி, குளம் மற்றும் கிணறுகளில் தேங்கிய குறைந்தளவு தண்ணீரைப் பயன்படுத்தி, குறுகிய கால பயிர் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

பாசன வசதி குறைவாக இருந்தாலும், பனி ஈரத்திலேயே விளையக் கூடிய உளுந்து பயிரை விவசாயிகள் அதிகளவில் மானாவாரியாகவும், பாசனப் பகுதிகளிலும் விதைப்பு செய்துள்ளனர். சவுக்கு, மரவள்ளி, கரும்பு பயிர்கள், கொய்யா, மா தோட்டங்களிலும் ஊடுபயிராகவும் உளுந்து சாகுபடி செய்தனர்.வடகிழக்கு பருவ மழை தொடர்ந்து ஏமாற்றியதால் பல இடங்களில் உளுந்து மற்றும் அவரை, துவரை போன்றவை காய்ந்து கருகும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் பெய்த லேசான தொடர் மழையால் மானாவாரியாக பயிர் செய்யப்பட்டிருந்த உளுந்து, எள், பனிப்பயிர் போன்றவற்றிற்கு சிறந்த பலன் ஏற்பட்டுள்ளது. அதையொட்டி உளுந்து பயிருக்கு களை எடுத்தல், பூச்சி மருந்து தெளித்தல் உள்ளிட்ட பணிகளை விவசாயிகள் துவக்கி உள்ளனர்.

நெல், கம்பு, கேழ்வரகு போன்ற பயிர்களை போன்று உளுந்து பயிரின் விலையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படுவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் உளுந்து விலை மூட்டை 4,000 ரூபாய் முதல் 4,500 ரூபாய் வரை விற்கிறது. இதனால் ஏக்கருக்கு 10,000 ரூபாய் முதல் 15,000 வரை லாபம் கிடைக்கிறது.உளுந்து உள்ளிட்ட பயிறு வகைப் பயிர்களுக்கு உழவு செலவு, மருந்து செலவு மற்றும் குறைந்த அளவு தண்ணீர், ஆட்கள் தேவை குறைவு என்பதால் விழுப்புரம் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் உளுந்து சாகுபடி செய்வதில் விவசாயிர்கள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.தியாகதுருகத்தில்மகசூல் பாதிப்புதியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் ஆண்டுதோறும் 8,000 ஏக்கர் பரப்பில் மானாவாரியில் உளுந்து சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையை நம்பி உளுந்து சாகுபடி செய்தனர். தொடர்ந்து மழை ஏமாற்றியதால் உளுந்து பயிர்கள் எதிர்பாத்த அளவுக்கு காய்கள் பிடிக்காமல் செடிகள்

காயத்தொடங்கியது. பிஞ்சுகள் முற்றுவதற்கு தேவையான மழை இன்றி பயிர்கள் வாடியது. விதைப்பு பணிகளை முதலில் துவக்கியவர்களின் நிலங்களில் ஓரளவு உளுந்து மகசூல் கிடைத்துள்ள நிலையில், கிடைத்த வரை லாபம் என்ற கணக்கில் விவசாயிகள் உளுந்து செடி அறுவடையை துவக்கியுள்ளனர். மழை ஏமாற்றியதால் மகசூல் பாதிக்கப்பட்ட நிலையில் எதிர்பாத்த விலையாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

## மரவள்ளி விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி

சின்னசேலம் : மரவள்ளிக்கிழங்கு விலை உயர்ந்துள்ளதால் சின்னசேலம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.சின்னசேலம் பகுதியில் விவசாயமே முக்கிய தொழிலாக உள்ளது. மணிலா, கரும்பு, நெல், மரவள்ளி மற்றும் தோட்டப்பயிர்கள் செய்யப்படுகிறது. பராமரிப்பு செலவு குறைவு மற்றும் அதிக அளவில் தண்ணீர் தேவையில்லை என்பதால் மரவள்ளி அதிகம் பயிரிடப்படுகிறது.கடந்த ஆண்டு கன மழை மற்றும் அதிக பரப்பளவில் மரவள்ளி பயிர்செய்யப்பட்டதால் விலை வீழ்ச்சியடைந்து, மூட்டை 200 ரூபாய் வரை மட்டுமே விற்றதால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டது. இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்தே மரவள்ளி விலை மூட்டை 500 ரூபாய்க்கு விற்கப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.மின் வெட்டு, உரம் விலை உயர்வு, ஆள் பற்றாக்குறை மற்றும் பருவமழை பொய்த்தது போன்ற காரணங்களால் வேதனையில் இருந்த விவசாயிகளுக்கு மரவள்ளி அதிக விலை உயர்வு சின்னசேலம் பகுதி விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## விதை உற்பத்திக்கான பயிற்சி முகாம்

அவலூர்பேட்டை : சங்கிலிகுப்பத்தில் தரமான விதை உற்பத்தி குறித்து பயிற்சி முகாம் நடந்தது. மேல்மலையனூர் ஒன்றியம் சங்கிலிகுப்பம் கிராமத்தில் விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு விதை உற்பத்தி செய்வது குறித்த தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.

ஊராட்சி தலைவர் தமிழ்ச்செல்வி, ஒன்றிய கவுன்சிலர் அமுதா முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி இயக்குனர் பழனிவேலு தலைமை தாங்கினார். நீர் வளம், நில வளம் மற்றும் வேர்க்கடலை, நெல், உளுந்து சாகுபடியில் தரமான விதைகளை உற்பத்தி செய்யும் முறைகள் குறித்து அவர் விளக்கினார்.

முன்னாள் எம்.எல்.ஏ., தமிழ்மொழி ராஜதத்தன் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேட்டினை வழங்கினார். நாகார்சுனா கெமிக்கல் பெர்டிலைசர்ஸ் பகுதிமேலாளர் செந்தில் குமார், 100 சதவீதம் மானிய விலையில் தெளிப்பு நீர் தூவும் கருவி, மழைத்தூவும் கருவிகளின் பயன் குறித்து

பேசினார்.

இதில் உதவி வேளாண் அலுவலர்கள் ரகுபதி, வெங்கடேசன், கிருஷ்ணமூர்த்தி,தமிழ்மணி, இளவரசி,பராசக்தி, அட்மா திட்ட களப்பணியாளர்கள் ஸ்ரீதேவி, அருள்பாபு, மோகன்ராஜ் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். கண்ணப்பன் நன்றி கூறினார்.

## உற்பத்தி குறைந்ததால் தேங்காய் விலை கிடுகிடு வடமாநிலங்களுக்கு அனுப்புவது அதிகரிப்பு

நங்கவள்ளி: வறட்சி காரணமாக தேங்காய் உற்பத்தி குறைந்ததால், விலை உயர்ந்துள்ளது. வட மாநிலங்களில் தேங்காய்களை கூடுதலாக கொள்முதல் செய்வதால், மண்டி உரிமையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டம், நங்கவள்ளி, ஜலகண்டபுரம், தாரமங்கலம், வனவாசி சுற்று பகுதிகளில், 50க்கும் மேற்பட்ட தேங்காய் மண்டி உள்ளது. மண்டி உரிமையாளர், சேலம், நாமக்கல், திருப்பூர், கோவை மாவட்டங்களில் இருந்து விவசாயிகளிடம் தேங்காய்களை கொள்முதல் செய்து கொண்டு வந்து, நார் உரித்து வெளிமாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

சீஸன் சமங்களில் நங்கவள்ளி பகுதியில் இருந்து தினமும், ஐந்து லட்சம் முதல், பத்து லட்சம் தேங்காய் லாரி மூலம் வெளிமாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படும். தேங்காய் உற்பத்தி அதிகரித்ததால், மூன்று மாதத்துக்கு முன், முதல்ரக தேங்காய் ஒன்று, 4.50ரூபாயாக வீழ்ச்சியடைந்தது.

விலை, 25 சதவீதம் வீழ்ச்சியடைந்ததால், விரக்தியடைந்த வியாபாரிகள் வெளிமாநிலங்களுக்கு தேங்காய் அனுப்பாமல் தங்கள் மண்டிகளில், 50 லட்சம் தேங்காய் வரை இருப்பு வைத்தனர். அந்த சமயத்தில் புயல் காரணமாக பலத்த மழை பெய்ததால் இருப்பு தேங்காய் அனைத்திலும் துளிர் விட்டு, அழுகி வீணாகியது. இதனால், மண்டி உரிமையாளர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

நடப்பாண்டு இறுதியில் வறட்சியால் தேங்காய் உற்பத்தி, 40 சதவீதம் வரை குறைந்தது. உற்பத்தி குறைந்த நிலையில், வடமாநிலங்களுக்கான தேவை அதிகரித்ததால் தற்போது முதல்ரக தேங்காய் விலை, 6 ரூபாயாக அதிகரித்துள்ளது. வரும் நாட்களில் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக மண்டி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதனால், சில நாட்களாக நங்கவள்ளி பகுதி மண்டிகளில் இருந்து, தேங்காய் மூட்டைகளில் கட்டி, மத்தியபிரதேசம், உத்தரபிரதேசம், ஜார்கண்ட், குஜராத், மஹாராஷ்டிரா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு அனுப்பி வருகின்றனர்.

## கருகல்! மழையின்மையால் மேய்ச்சல் நிலங்கள்... தீவனம் கிடைக்காமல் கால்நடைகள் தவிப்பு

ஆத்தூர்: பருவ மழை பொய்த்ததால், ஆத்தூர் சுற்றுவட்டார பகுதியில் உள்ள நிலங்களில், பசும் புற்கள் கருகியது. அதனால், ஆடு, மாடுகள், காய்ந்த புற்களை உணவாக உட்கொள்ளும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட தென் மாவட்டங்களில், செம்மறி, மாலாடு, குறும்பை ஆடுகள் அதிகளவில் வளர்க்கப்படுகிறது. அம்மாவட்டங்களில், கால்நடை மேய்ச்சல் நிலம் போதியளவில் இல்லாததால், ஆடு வளர்ப்பவர்கள், சேலம், ஆத்தூர், தலைவாசல், சின்னசேலம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு சென்று, மேய்ச்சல், தரிசு நிலம், நீரோடை, ஆற்று படுகை பகுதியில், ஆடு, மாடுகளை மேய்த்து வருகின்றனர்.

அதேபோல், உள்ளூரை சேர்ந்த கால்நடை விவசாயிகள், ஆடு, மாடுகளை மேற்குறிப்பிட்ட பகுதியில், மேய்ச்சலுக்கு கொண்டு செல்கின்றனர். ராமநாதபுரத்தை சேர்ந்த செம்மறி, குறும்பை ஆடு வளர்ப்பவர்கள், "நாடோடிகள்' போன்று, பல்வேறு மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து, ஆடு மேய்ப்பது அதிகரித்துள்ளது.

சேலம் மாவட்டம், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம், வாழப்பாடி சுற்றுவட்டார பகுதியில், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு பிரதான தொழிலாக உள்ளது. இப்பகுதியில், மேய்ச்சல் நிலம், ஏரி, ஆறு, நீரோடை, தரிசு நிலங்கள் அதிகளவில் இருந்தது. அதனால், ராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட செம்மறி ஆடு வளர்ப்பவர்கள், ஆத்தூர், தலைவாசலில் முகாமிட்டு, ஆடு மேய்த்து வருகின்றனர். இந்த ஆடுகளின் கழிவுகள், விளை நிலங்களில், இயற்கை உரமாக பயன்படுத்துவதன் மூலம், கூடுதல் மகசூல் கிடைத்து வருகிறது. செம்மறி, குறும்பை ஆடுகள் உமிழும் புழுக்கை, சிறுநீர், மகத்துவம் வாய்ந்த இயற்கை உரமாக பயன்படுவதால், இக்கழிவுகளுக்காக, விளை நிலங்களில், "கிடை' அமைக்க, விவசாயிகளே வாடகை கொடுத்து வருகின்றனர். அதில், செம்மறி, குறும்பை ஆடுகளுக்கு, தலா இரண்டு ரூபாய் வீதம் வாடகையாக, ஆடு வளர்ப்பவருக்கு, விவசாயிகள் கொடுக்கின்றனர்.

இந்நிலையில், ஆத்தூர் சுற்றுவட்டார பகுதியில், பருவ மழை பொய்த்து போனதால், நீர் நிலைகள், தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கிறது. தவிர, மேய்ச்சல், தரிசு நிலம், நீர் நிலை புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால், கால்நடை வளர்ப்போர், தாங்கள் வளர்க்கும் ஆடு, மாடுகளை கூட மேய்ப்பதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது.

மேலும், பருவ மழை இல்லாததால், விளை நிலம், தரிசு, மேய்ச்சல் நிலங்களில் பசும் புற்கள்

காய்ந்து கருகி வருகிறது. அதனால், காய்ந்து போன புற்களில், செம்மறி, குறும்பை ஆடுகளை, கால்நடை வளர்ப்போர் மேய்த்து வருகின்றனர். ஆடு, மாடு போன்ற கால்நடைகளுக்கு, பசும் புற்கள் உட்கொண்டால், உடல் எடை கூடும், நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும்.

தற்போது, காய்ந்த புற்களை அரைகுறையாக உட்கொள்ளும் கால்நடைகள் உடல் மெலிந்து வருகிறது. இதனால், கால்நடைகளுக்கு, நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, நோய் தாக்கமும் ஏற்பட்டு வருவதோடு, விளை நிலங்களுக்கு இயற்கை உரமான, கால்நடை கழிவுகள் குறைந்த அளவில் கிடைக்கிறது.

அதனால், கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் கடும் விரக்தியடைந்துள்ளனர்.

## நெற்பயிரில் இலைச் சுருட்டுப் புழுவை தடுக்கும் முறைகள் * வேளாண் அலுவலர் "அட்வைஸ்'

தென்காசி:வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் விவசாயிகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது நெல்லை மாவட்டம் கடையம் வட்டாரத்தில் பரவலாக நடவு செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழுக்களின் தாக்குதல் அதிகமாக காணப்படும். பெத்தான்பிள்ளைகுடியிருப்பு, சம்பன்குளம், ஆம்பூர் பகுதிகளில் சாகுபடி செய்துள்ள சாவித்திரி நெல் பயிரில் இலைசுருட்டுப்புழு தாக்குதல் அதிகம் காணப்படுகிறது.

இப்பூச்சிகள் பெரும்பாலும் இரவு நேரங்களில் காணப்படுகிறது. மழை குறைவாகவும், மேகமூட்டமாக இருக்கும் சூழலில் இவற்றின் தாக்குதல் அதிகமாக இருக்கும். தாய் அந்துப் பூச்சிகள் வெளிரிய பழுப்பு நிறத்தில் பளபளக்கும் மஞ்சள் கலந்த பழுப்பு நிற இறக்கையுடன் காணப்படும்.

வயல்கள் மற்றும் வரப்புகளில் உள்ள புற்களை நீக்கி வயலைச் சுத்தமாக வைத்திட வேண்டும். அதிகமாக தழைச்சத்து அதாவது யூரியா போட்ட வயல்கள், குருனை மருந்தான போரேட், கார்போபியூரான் போடப்பட்ட வயல்களில் பாதிப்பு அதிகமாக காணப்படும். நிழல் உள்ள இடங்களில் மற்றும் பயிர் நெருக்கமாக அதிக தழைச்சத்து பெற்று வளமாக இருக்கும் இடங்களில் முதலில் தாக்குதல் தென்படும் தழைச்சத்து ஒரு ஏக்கருக்கு 25 கிலோவுடன் 35 கிலோ பொட்டாஷ் உரத்தை இரு தடவையாக பிரித்து இடவேண்டம். மேலும் ஒரு ஏக்கருக்கு டிரைக்கோ கிரம்மா கைலோனிஸ் ஓட்டுண்ணியை 5சிசி என்ற அளவில் வாரம் ஒரு முறை வயலில் உலவ விட்டால் இப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

பூச்சி மருந்தை காலை அல்லது மாலை வேளைகளில் வயலில் நீரை நன்கு வடித்துவிட்டு ஒரே

மருந்தை திரும்ப திரும்ப தெளிக்காமல் மருந்துகளை சுழற்சி முறையில் அடித்து பூச்சிகளை தடுக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## உரக்கடை லைசென்ஸ் புதுப்பிக்க வலியுறுத்தல்

கரூர்: "கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் உள்ள உரக்கடைகளின் லைசன்ஸ் புதுப்பிக்க வேண்டும்' என, கிருஷ்ணராயபுரம் வேளாண்மை உதவி இயக்குனர் பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

கிருஷ்ணராயபுரம் வட்டார பகுதிகளில் அரசு அனுமதி பெற்று உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை செய்யும் கடைகளில், அரசு அறிவுரையின்படி, விலை கடைபிடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் செயல்படும் உரக்கடைகளில், பெரும்பாலான கடைகளில் பூச்சி மருந்து விற்பனை லைசன்ஸ், கடந்த டிசம்பர் மாதத்துடன் முடிந்தது.

எனவே, பூச்சிமருந்து விற்பனையாளர்கள், பூச்சிமருந்து விற்பனை லைசன்ஸை உடனடியாக புதுப்பித்து கொள்ள வேண்டும். உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை உரிமம் இல்லாமல், விற்பனை செய்யப்பட்டால், அரசு விதிமுறைகளின்படி, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## கறியாக மாறும் விலையில்லா ஆடுகள் அரசின் திட்டம் பாழ்படும் சூழ்நிலை

ப.வேலூர்: அரசு வழங்கிய விலையில்லா ஆடுகள், கசாப்பு கடைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதிகாரிகளின் மெத்தனத்தால், அரசு திட்டம், முழுமையாக நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசு, ஏழையிலும் ஏழைகளுக்கு, விலையில்லா கறவை மாடு, ஆடுகள் வழங்கும் திட்டத்தை துவக்கியது. அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும், தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு, விலையில்லா கறவை மாடு, ஆடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வாறு அரசு வழங்கிய ஆடுகளை, பலர், கசாப்பு கடைகளுக்கு விற்பனை செய்து வந்தனர். அதையறிந்த தமிழக அரசு, "விலையில்லா ஆடுகளை யாரும் விற்பனை செய்யக்கூடாது; குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை அதிகாரிகள் வந்து ஆய்வு செய்வர். அப்போது, ஆடுகள் விற்பனை செய்யப்பட்டிருந்தால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என எச்சரித்தது.

நாமக்கல் மாவட்டத்தில், ப.வேலூர் பகுதியில், அரசின் விலையில்லா ஆடு வழங்கும் திட்டத்தின் கீழ், ஏராளமான ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது, பருவமழை பொய்த்து போனதால்,

தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு மேய்ச்சல் நிலங்கள் வறண்டு காணப்படுகிறது.
அதனால், ஆடுகளுக்கு தேவையான செடி, கொடிகள் கிடைப்பதில்லை. மேலும், வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு, விலையில்லா ஆடுகள் வழங்கப்படுவதால், அவர்கள் வாழ்க்கையை ஓட்டுவதற்கு போதிய பணம் இன்றி தவிக்கின்றனர்.
அதனால், அரசு வழங்கிய விலையில்லா ஆடுகளை, கசாப்பு கடைக்கு விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தற்போது, ப.வேலூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில், அரசு வழங்கிய ஆடுகள், கறிக்கடையில் விற்கப்பட்டு கறியாக மாறி வருகிறது. அதனால், அரசின் திட்டம் முழுமையாக நிறைவேறுவதில், முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.
மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், முறையாக சென்று பார்வையிடாமல் மெத்தனமாக இருப்பதால், ஆடுகள் கசாப்பு கடைகளுக்கு சென்று கொண்டிருக்கிறது. "அவற்றை தடுக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட வேண்டும்' என, கோரிக்கை எழுந்துள்ளது.

## ஈரோட்டில் இளநீர் விலை விர்... குளிர் காலத்திலும் கடும் கிராக்கி

ஈரோடு:ஈரோட்டில், வறட்சியின் காரணமாக இளநீர் விலை, தாறுமாறாக உயர்ந்துள்ளதால், வாடிக்கையாளர்கள் அதிர்ச்சியில் உள்ளனர்.
தமிழகம் முழுவதும் ஐந்து கோடி தென்னை மரங்கள் தற்போது நடைமுறையில் உள்ளன. தென்னை மரங்களை பொருத்த வரையில், 70 ஆண்டுகள் பயனளிக்க கூடிய சாகுபடியாகும். தமிழகத்தில், தென்னை சாகுபடியில், கோவை மாவட்டம் பொள்ளாச்சி முதலிடமும், தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு, பேராவூரணி மற்றும் பட்டுக்கோட்டை இரண்டாமிடமும், தேனி மாவட்டம் மூன்றாமிடமும், ஈரோடு மாவட்டம் நான்காமிடமும் வகிக்கிறது.
ஆண்டுக்கு, 30 லட்சம் தென்னை மரக்கன்றுகளை விவசாயிகள் புதிதாக நடுகின்றனர். விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த தேங்காயில், 30 சதவீதம் மார்க்கெட்டுக்கும், 50 சதவீதம் கொப்பரைக்கும், 20 சதவீதம் இளநீர் விற்பனைக்கும் கொடுக்கின்றனர்.
மருத்துவ குணமுள்ள இளநீர், ஈரோடு டவுன் மட்டுமின்றி, மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளது. 5 முதல் 10 ரூபாய்க்கு விற்ற இளநீர், வறட்சியால், அதன்விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. ஈரோட்டில் இளநீர் காய்களின் விலை, 20 முதல், 25 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.
ஈரோடு கொல்லம்பாளையம் வியாபாரி ஒருவர் கூறியதாவது:

மழையின்றி தமிழகம் முழுவதும் கடும் வறட்சியை தழுவியுள்ளது. இதனால், தென்னை மரத்தில் காய்கள் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. அவ்வாறே இளநீர் கிடைத்தாலும் அதில் குறைந்தளவே தண்ணீர் உள்ளது. மருத்துவ குணமுள்ள இளநீரை, உடல் சூடு, தாகம், தண்ணீருக்கு மாற்றாகவும், டாக்டர்கள் பரிந்துரையால் வாங்கி பருகுவர். தண்ணீர் உள்ள இளநீர் கிடைக்க கிராமம் வாரியாக அல்லாடுகிறோம்.
தாளவாடி, ஆசனூர் ஆகிய பகுதிகளில் இருந்து இளநீர் லோடாக வாங்கி வருகிறோம். அதன் அடக்க விலையே, 16 ரூபாயாகும். அதனை நாங்கள், 20 ரூபாய் வரை விற்பனை செய்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## விலை உயர்ந்தது மலைவாழைக்காய்



தாண்டிக்குடி: தாண்டிக்குடி மலைப்பகுதியில் வரத்து குறைவால், மலை வாழைக்காய் விலையுயர்ந்துள்ளது. இது விவசாயிகளுக்கு ஆறுதல் அளித்துள்ளது. திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி கீழ்பழநி மலைப்பகுதியில் மலை வாழை 40 ஆயிரம் ஏக்கர் பரப்பில் விவசாயம் செய்யப்படுகிறது. முடிக்கொத்து, செந்தாழை உள்ளிட்ட நோய் பாதிப்பு, வனவிலங்கு தாக்குதல் என இவ்விவசாயம் வெகுவாக பாதித்துள்ளது . பருவ மழை பொய்த்ததால் திரட்சியான காய்கள் வரத்து குறைந்ததுள்ளது. இதனால் 400 காய்கள் கொண்ட முதல் தர (பொதி) ரூ.3,600க்கு ஏலம் போகிறது. இதுகுறித்து கமிஷன்கடை உரிமையாளர் மகேந்திரன் கூறுகையில், ""வாரத்திற்கு 1 லட்சம் காய்கள் வந்த சந்தையில், தற்போது பாதியாகியுள்ளது. போதிய மழையின்மையே இதற்கு காரணமாகும். சில வாரங்களாக வரத்து குறைவால் காய்கள் விலை உயர்ந்துள்ளது. காய்களுக்கு தகுந்தாற்போல் பொதி ஒன்றுக்கு ரூ.2000 முதல் 4 000 வரை ஏலம் போகிறது," என்றார்.

## காய்கறி உற்பத்தியை பெருக்க ரூ.19 கோடி ஒதுக்கீடு



தேனி:ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், தமிழக அரசு காய்கறிகள், பழச்செடிகள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்துள்ளது.தமிழகத்தில், 75 ஆயிரம் ஹெக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக, 50 சதவீத மானிய விலையில், காய்கறி விதைகளை வழங்க, 19.25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
இத்திட்டத்தின் கீழ், வீரிய ஒட்டு மற்றும் உயர் விளைச்சல் ரக காய்கறி விதைகள், பழச்செடிகள் ஆகியவை, மானிய விலையில், விவசாயிகளுக்கு வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு, அதிகபட்சமாக அரை ஹெக்டேருக்கு தேவையான காய்கறி விதைகள், மற்றும் ஒரு ஹெக்டருக்கு தேவையான பழச்செடிகள் வழங்கப்படும் என, தோட்டக்கலைத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
விவசாயிகள், வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகங்களில், அனைத்து காய்கறி விதைகள், பழக்கன்றுகள் ஆகியவற்றை மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாம். நடப்பு நிதியாண்டில், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு அதிகம் என, அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இன்றைய வேளாண் செய்திகள்

02.01.2013 A.M

## பொங்கல் பண்டிகைக்காக அறுவடைக்கு தயாராக உள்ள கரும்புகள்

அரூர்,: அரூர் பகுதியில் பொங்கல் பண்டிகைக்கா அறுவடை செய்ய கரும்புகள் தயார் நிலையில் உள்ளன.

தமிழர்களின் முக்கிய பண்டிகையான தைப்பொங்கல் விழாவில் முக்கியத்துவம் வாய்ந்தது கரும்பு. இதில் பன்னீர் கரும்பை பொங்கல் வைக்கும் போது உடன் வைத்து பூஜை செய்து அனைவரும் உண்பது வழக்கம்.

தர்மபுரி மாவட்டத்தில் குறைந்த பரப்பளவிலேயே பயிரிடப்படும் இந்த பன்னீர் கரும்பின் விலை இந்த ஆண்டு உயரும் என விவசாயிகள் தெரிவித்தனர். அரூர் அருகே உள்ள கோபிநாதம்பட்டி கூட்ரோடு, பறையப்பட்டி புதூர் ஆகிய பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள பன்னீர் கரும்பு பொங்கல் பண்டிகைக்கு அறுவடை செய்ய தயாராக உள்ளது.

இது குறித்து விவசாயி சுரேஷ் கூறுகையில், ‘10 மாத கால பயிரான இந்த பன்னீர் கரும்பு சாகுபடி செய்ய ஏக்கர் ஒன்றுக்கு `70 ஆயிரம் செலவாகிறது. ஒரு ஏக்கரில் 22 ஆயிரம் கரும்பு நடவு செய்ய முடியும். சரியாக பராமரித்தால் செலவை விட 60 சதவீதம் லாபம் கிடைக்கும். சென்ற ஆண்டு சில்லரை விலையில் ஒரு கரும்பு `15 முதல் `20 வரை விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு `20 முதல் `25 வரை விற்பனை செய்யப்படும் என தெரிகிறது. இந்த ஆண்டு தேவையை விட மிக குறைவான அளவிற்கே பன்னீர் கரும்பு பயிரிடப்பட்டுள்ளதால் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது’ என கூறினார்.

## திருப்பூரில் முதல்முறையாக மஞ்சள் ஏலம் துவங்கியது



திருப்பூர்: திருப்பூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகின்றன. விவசாயிகள் இதுவரை ஈரோடு, கோவை மஞ்சள் மார்க்கெட்டில் மஞ்சளை விற்பனை செய்து வந்தனர். இந்நிலையில், திருப்பூர் மாவட்ட மஞ்சள் சாகுபடி விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் வாயிலாக முதல் முறையாக மஞ்சள் ஏலம் நேற்று தொடங்கப்பட்டது.ஏலத்தை கலெக்டர் கோவிந்தராஜ் தொடங்கி வைத்தார். வேளாண் துணை இயக்குநர் பழனிசாமி, ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் சண்முகம், விவசாயிகள், வியாபாரிகள் பங்கேற்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், ‘‘மஞ்சளை விற்பனை செய்ய கோவை, ஈரோடுக்கு செல்ல வேண்டிய நிலையில், போக்குவரத்து செலவு அதிகம் ஏற்பட்டது. திருப்பூரில் மஞ்சள் ஏலம் தொடங்கப்பட்டது இம்மாவட்ட விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.இதன்மூலமாக மஞ்சளை கொண்டுசெல்வதற்கான போக்குவரத்து செலவு குறைந்துள்ளது. தற்போது மஞ்சள் குவின்டாலுக்கு ரூ.6 ஆயிரம் வரை விலை உள்ளது. இருப்பினும், சாகுபடி செலவு அதிகரித்திருப்பதால் விலை கட்டுபடியாகவில்லை,‘‘ என்றனர். ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமைதோறும் மஞ்சள் ஏலம் நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பால் உற்பத்தி 4% அதிகரிக்கும்

நடப்பு 2012–13–ஆம் நிதி ஆண்டில் இந்தியாவில் பால் உற்பத்தி, சென்ற நிதி ஆண்டைக் காட்டிலும் 4 சதவீதம் அதிகரித்து 12.79 கோடி டன்னிலிருந்து 13.37 கோடி டன்னாக உயரும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. கடந்த 2007–08–ஆம் நிதி ஆண்டில் நம் நாட்டில் ஒரு தனிநபருக்கு கிடைக்கும் பால் அளவு 260 கிராமாக இருந்தது. இது, கடந்த நிதி ஆண்டில் 290 கிராமாக உயர்ந்தது.